ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2205/9 - 2020 දෙසැම්බර් මස 09 වැනි බදාදා - 2020.12.09

2205/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 6/2017.

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்**

6 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், குடியியல் வான்செலவு அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன், இக்கட்டளைமூலம், அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களில் வான்வழிச் சேவையை வழங்குவதற்காக இதன் தேதியிலிருந்து பயனுறுவதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைச் சேவை வழங்குநராக நியமிக்கின்றேன்,

**பிரசன்ன ரணதுங்க,**
சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு
2020, திசெம்பர் 07.

1A - G 33318— 30 (2020/12)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை I**

***நியமன நியதிகளும் நிபந்தனைகளும்***

1. அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களிலான சேவைகளை வழங்குவதில், (இதனகத்துப்பின்னர், ''சேவை வழங்குநர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்திலுள்ள ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது நடைமுறைப்படுத்துகின்ற நியமங்களுக்கும் இசைந்தொழுகுதல் வேண்டும்;

2. சேவை வழங்குநர், எரிபொருளையும் உராய்வு நீக்கிகளையும் வழங்குவதற்காக, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினால் அல்லது நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநரினால் சேவை வழங்குநருக்குக் குத்தகைக்கு விடப்படக்கூடிய எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களையும் நன்னிலையிற் பேணுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனத்தை எவரேனும் மூன்றாந்திறத்தவருக்குக் கீழ்க்குத்தகைக்கு விடுதலுமாகாது;

3. சேவை வழங்குநர், அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களில் எரிபொருளையும் உராய்வு நீக்கிகளையும் வழங்குவதற்குத் தேவையான தகுதிச் சான்றிதழ்களையும் உரிமங்களையும், அச்சேவைகள் ஏற்புடையற்பாலனவான சர்வதேச நியமங்களுக்கும் விதந்துரைக்கப்பட்ட செயல்முறைகளுக்கும் இசைந்தொழுக வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கென அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

4. சேவை வழங்குநர், இக்கட்டளையின்கீழ் எரிபொருளையும் உராய்வு நீக்கிகளையும் வழங்குதல் தொடர்பில் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விமானநிலையங்களினுள்ளும் அவற்றிலிருந்தும் தொழில்படுகின்ற வானூர்திக் கம்பெனிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய ஒப்பந்தம் அரசை எம்முறையிலேனும் பிணித்தலுமாகாது;

5. சேவை வழங்குநர், அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் எழுத்தில் தேவைப்படுத்தப்படும்போது, இக்கட்டளையின்கீழ் சேவை வழங்குநரினால் சேவைகள் வழங்கப்படுதல் தொடர்பான ஏதேனும் நிருவாக, தொழிற்பாடுசார், தொழினுட்ப அல்லது நிதிக்கருமங்கள் சம்பந்தமாக இயைபான எல்லாத் தரவுகளையும், புள்ளிவிபரங்களையும், தகவல்களையும் செயலாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்;

6. சேவை வழங்குநர். இக்கட்டளையினால் அதிகாரமளிக்கப்பட்ட சேவைகளை, அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களின் தொழிற்பாடுகளினது வெளியிடப்பட்ட மணித்தியாலங்களின்போது அத்தகைய விமான நிலையங்களினுள்ளும் அவற்றிலிருந்தும் தொழிற்படுகின்ற ஏதேனும் வானூர்திக்கு வினைத்திறனான முறையில் வழங்குதல் வேண்டுமென்பதுடன் அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரமின்றி சேவைகளின் வழங்குகையை மாற்றுதலோ, தாமதப்படுத்துதலோ, இடைநிறுத்துதலோ அல்லது நிறுத்தி விடுதலோ ஆகாது;

7. சேவை வழங்குநர், சந்தைக் கோரிக்கையை எப்போதும் மீளாய்தல் வேண்டுமென்பதுடன் கட்டளையினால் அதிகாரமளிக்கப்பட்ட சேவைகளை வழங்குகையைச் சீராக்குதலும், விசாலித்தலும் அல்லது தரமுயர்த்தலும் வேண்டும் ; அத்துடன் அவசியமானவிடத்து, சேவை வழங்குநரின் உட்கட்டமைப்பு, தொழினுட்பவியல் அல்லது தொழிற்பாடுசார் நடவடிக்கை முறைகள் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தடையொன்றாக இராதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

8. அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களில் சேவைகளை வழங்குவதற்காக வானூர்திக் கம்பெனிகளிடமிருந்து சேவை வழங்குநரினால் அறவிடப்பட வேண்டிய விதிப்பனவுகள், பிராந்தியத்திலுள்ள எரிபொருள் விலைகளுடன் ஒப்பிடுகையில் போட்டியுள்ளனவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விதிப்பனவுகள் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்;

9. சேவை வழங்குநர், அதன் தொழிற்பாடுகளின்போது எழக்கூடிய உள்ளபடியான அல்லது இயல்திறப் பொறுப்புக்களை அல்லது நட்டஈடுகளை எதிர்கொள்வதற்குப் போதிய காப்புறுதிக் காப்பீட்டை ஒழுங்கேற்பாடு செய்தல் வேண்டும் என்பதுடன் அரசானது அத்தகைய பொறுப்புகளுக்கு அல்லது நட்டஈடுகளுக்குப் பொறுப்பாதலுமாகாது;

10. சேவை வழங்குநரின் கூட்டிணைப்பு அடையாளம், பங்குமூலதனம் அல்லது பெயர் என்பவற்றிலான மாற்றத்துக்கு அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரம் தேவைப்படும்;

11. சேவை வழங்குநர், அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களிற்கான சேவைகளின் வழங்குகையைக் கைமாற்றுதலோ அல்லது கீழ்க்குத்தகைக்கு விடுதலோ ஆகாது;

12. இக்கட்டளையின் நோக்கத்துக்காக -

"அதிகாரசபை" என்பது. 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபை என்று பொருளாகும்; அத்துடன்

"அமைச்சர்" என்பது, குடியியல் வான்செலவு என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்ற அமைச்சர் என்று பொருளாகும்.

**அட்டவணை II**

***எந்த விமான நிலையங்களில் சேவை வழங்குநரினால் சேவைகள் வழங்கப்பட வேண்டுமோ அந்த விமான நிலையங்கள்***

(அ) கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையம்;

(ஆ) மத்தள ராஜபக்ஷ சர்வதேச வானூர்தி நிலையம்;

(இ) கொழும்பு சர்வதேச வானூர்தி நிலையம், ரத்மலானை;

(ஈ) மட்டக்களப்பு சர்வதேச வானூர்தி நிலையம்; அத்துடன்

(உ) யாழ்ப்பாணம் சர்வதேச வானூர்தி நிலையம்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.